வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

CIDA ඉදිකිරීම් කර්මාන්ත සංවර්ධන අධිකාරිය
திர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY

CETRAC CONSTRUCTION EQUIPMENT TRAINING CENTRE

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பத்தரமுல்லை, பெலவத்த, டி.பீ. விஜேசிங்க மாவத்தை, இல. 17 நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் (CETRAC) நிர்வாக, சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிட கட்டிடங்களின் கூரைக் கொங்கிரீட் தளத்தில் நீர் காப்பின் புனரமைப்பு

பெறுகை இல.: 1/4/7/00/146-2026

1. 2026.10.28 இன் வெளியிட்டு இல. 1/4/7/00/146-2026 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) வெளியிடப்பட்ட இந்தப் பெறுகைக்காக பொதுப் பெறுகை அறிவித்தலை பின்பற்றி விலைமனுக்களுக்கான இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

2. கீழ் விபரிக்கப்பட்ட நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் (CETRAC) நிர்வாக, சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிட கட்டிடங்களின் கூரைக் கொங்கிரீட் தளத்தில் நீர் காப்பின் புனரமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC - பாரிய அளவானது), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

ஒப்பந்தத் தலைப்பு	CIDA குறைந்தபட்ச தரம் மற்றும் சிறப்புத் துறை	நிர்மாணக் காலம் (நாட்கள்)
நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் (CETRAC) நிர்வாக, சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிட கட்டிடங்களின் கூரைக் கொங்கிரீற் தளத்தில் நீர் காப்பின் புனரமைப்பு	SP3 மற்றும் அதற்கு மேல் நீர் காப்பு	91

இவ்வேலையானது, தற்போது உள்ள சீமெந்து தொகுதிகளை அகற்றுதல், பழைய நீர்ப்புகா அடுக்கை அகற்றுதல், பழைய பிரைமர் அடுக்கைச் சுரண்டி அகற்றி கொன்கிரீட் மேற்பரப்பை வெளிப்படுத்துதல், தற்போதுள்ள சுவர் பூச்சை 300 மி.மீ. உயரம் வரை அகற்றுதல் மற்றும் மீண்டும் சுவர் பூச்சு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்தத் தளம் பத்தரமுல்லை, பெலவத்த, டி.பீ. விஜேசிங்க மாவத்தை, இல. 17, நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் (CETRAC) அமைந்துள்ளது.

3. தேவையான குறைந்தபட்ச திரவச் சொத்துக்கள் அல்லது கடன் வசதிகள் 42 மில்லியன் ரூபாவுக்கு இருத்தல் வேண்டும்.

4. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

5. தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் பின்வரும் பொது குறிப்பிட்ட அளவுகோலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
   - கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்ட நிர்மாண வேலையின் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்து 50 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
   - பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களைக் குறிப்பிட்டு CIDA பதிவின் பதிவுப் புத்தகத்தின் தொடர்புடைய பிரதிகள்
   - கடந்த 10 ஆண்டுகளில் இதனையொத்த பண்புகளையும் சிக்கலான தன்மையையும் கொண்ட திட்டங்களை நிறைவேற்றிய அனுபவம்
   - தேவையான குறைந்தபட்ச திரவச் சொத்துகள் அல்லது கடன் வசதிகள் 42 மில்லியன் ரூபா.
   - விலைமனுதாரர்கள் பொருந்தக்கூடிய மற்றும் 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் அனைத்து பொருந்தக்கூடிய திருத்தங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கும் இணங்கியிருத்தல் வேண்டும்.

6. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் 0112-784413 மற்றும் jnimanthi@gmail.com மூலம் நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (CETRAC), EMS/ பணிப்பாளர் பொறி. (செல்வி) ஜே.ஏ.என்.என்.கே. ஜயகொடி அவர்களிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2026.10.28 ஆம் திகதி தொடக்கம் 2026.11.16 ஆம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.00 வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.00 வரை வழங்கல் பிரிவில் பெறுகை ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

7. மீளளிக்கப்படாத கட்டணமாக 8,000.00 ரூபாவைச் செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை CIDA இன் சிறாப்பருக்கு ரொக்கப்பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

8. விலைமனுக்களை 2026.11.17 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்ட முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழுள்ள முகவரியில் 2026.11.17 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். வெவ்வேறாக அசல் மற்றும் நகல் கடித உறைகளை முத்திரை பொறிக்கப்பட்ட வெளிப்புற உறையில் மூடி இடது பக்க மேல் மூலையில் ''CETRAC) நிர்வாக, சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிட கட்டிடங்களின் கூரைக் கொங்கிரீட் தளத்தில் நீர் காப்பின் புனரமைப்பு'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள வடிவத்திற்கு அமைய 2027.03.16 ஆம் திகதி வரை செல்லுபடியான 418,000.00 இ. ரூபாவின் விலைமனு பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்கள் 2027.02.16 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

10. மேலுள்ள உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட முகவரி/ முகவரிகள்:

வழங்கல் பிரிவு,
2ஆவது மாடி,
நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை,
"சவ்சிறிபாய"
இல. 123, விஜேராம மாவத்தை,
கொழும்பு - 07

தலைவர் (பெறுகைக் குழு - பாரிய அளவானது)
நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
செவ்சிறிபாய
123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொ. பே.: 0112 699 801, 011 2 686 092 தொலைநகல்: 011 2 699 738
மின்னஞ்சல்: ictadsupply@gmail.com
இணையதளம்: www.cida.gov.lk

28.10.2026